DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
C.C. No. 214/2020
**Depositions of PW 7**

| Name | இமானுவேல் ராஜ்குமார் | Caste | |
|---|---|---|---|
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18thDay of November 2025

**18-11--2025**
(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் திண்டுக்கல் மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04-01-2020 ஆம் தேதி உதவி ஆய்வாளர் காசிராஜன் பதிவு செய்த சிவகாசி கிழக்கு காவல் நிலைய குற்ற எண். 10/2020 இதச பிரிவுகள் 279, 304(ஏ) - என்ற வழக்கின் கோப்பினை புலன்விசாரணைக்காக என் பார்வைக்கு முன்வைத்தார். நான் வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, மறுநாள் 5-01-2020 ஆம் தேதி அதிகாலை 0.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜா, முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைபார்வையிட்டு, மாதிரி வரைபடம், பார்வை மகஜர்ஆகியன தயார் செய்தேன். **மாதிரி வரைபடம், அ.சா.ஆ.-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், சாட்சிகள் ராஜா, கனி, மணிகண்டன், பாலகுருசாமி, முருகன், வைரம், வரதராஜன், சுந்தரம்,

பாண்டிச்செல்வி, ராஜா, முருகன் ஆகியோர்களை விசாரித்து, அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தேன். பின்னர் அன்றை ய தினம் சிவகாசி அரசு மருத்துவமனையின் பிணவறையில் வைத்து, விபத்தில் இறந்துபோன பால்பாண்டி என்ற பிரேதத்தின்மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.– 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) பின்னர், விபத்தில் இறந்துபோன பால்பாண்டி என்பவரது இறப்பின் காரணம் அறிவதற்காக பிரேத பரிசோதனைக்கான வேண்டுதல் கடிதத்தினை காவலர் வெள்ளைச்சாமி என்பவர் மூலம் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். விபத்து தொடர்புடைய TN 39 BD 1251 என்ற பதிவெண்கொண்ட இருசக்கர வாகனத்தைய ஆய்வு செய்ய வேண்டுகோள் கடிதத்தினை மோட்டார்வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். விபத்தில் காயமடைந்த எதிரி அந்தோணிகுரூஸ் மற்றும் இறந்துபோன பால்பாண்டி ஆகியோரை சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது, எதிரி அந்தோணிகுரூஸ் சிகிச்சை அளித்தும், எதிரிக்கும், இறந்துபோன பால்பாண்டி ஆகியோருக்கும் விபத்து பதிவேடு பதிவு செய்த அரசு மருத்துவர் தீபன் பாரதி என்பவரைவிசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடுகள் பெற்றேன். எதிரி **அந்தோணிகுரூஸ்க்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.–6** ஆகவும், **இறந்துபோன பால்பாண்டிக்கு பதிவு செய்யப்பட்ட விபத்துபதிவேடு அ.சா.ஆ.–7** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் விபத்தில் இறந்துபோன பால்பாண்டி என்பவரது பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் சாமிநாதன் என்பவரை விசாரித்து, அவரது

வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.,சா.ஆ.–8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) பின்னர் காவலர் வெள்ளைச்சாமி, வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளர் காசிராஜன் ஆகியோரை விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தேன். பின்னர் நான் பணிமாறுதலில் சென்றுவிடவே வழக்கு கோப்பினை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் ராஜா சாட்சிகளை விசாரித்தபோது, சாட்சிகள் என்னிடம் அளித்தவாக்குமூலங்களையே அவரிடமும் அளித்ததால் வாக்குமூலங்களை அவர் தனியாக பதிவு செய்யவில்லை. விபத்து தொடர்புடைய வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் கண்ணன் என்பவரை விசாரித்து, அவரது வாக்குமூலத்தை பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். TN 39 BD 1251 என்ற பதிவெண் கொண்ட **ஹீரோ ே◌ஹாண்டா இருச்ககர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.–9** ஆக குறியீடு செய்யப்டுகிறது. எதிரியை தேடிவந்த நிலையில், எதிரி நீதிமதன்றத்தில் சரண்டர் ஆனதால் கைது செய்யப்படவில்லை. பின்னர் காவல்ஆய்வாளர் ராஜா தனது புலன்விசாரணையை முடித்து, எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(ஏ) மற்றும் மோட்டார் வாகன சட்டம் பிரிவு 185 இன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திலிருந்து காவல் நிலையம் எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்றால் 20 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால்

சரியல்ல, 10 நிமிடத்தில் சென்றுவிடலாம். சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரம் இருட்டாக இருக்கும் நேரம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் மின்விளக்குகள் ஏதும் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ளதாக கூறப்படும் செவன்த்டே பள்ளியில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளதா என்றால் வெளியில் பொருத்தப்பட்டிருக்கவில்லை. மேற்படி செவன்த்டே பள்ளியின் இரவு காவலரை நான் சாட்சியாக விசாரித்தேனா என்றால் இல்லை. செவன்த்டே பள்ளியில் இரவு நேர காவலர் இருந்தும் அவரை நான் சம்பவம் குறித்து விசாரிக்க தவறிவிட்டேன் என்றால் சரியல்ல, அது கொரோனா தொற்று காலம் என்பதால் இரவு காவலர் அங்கு பணியில் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகில் பேப்பர் குடோன் ஒன்று இருப்பதாக மாதிரி வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. அது எந்த கம்பெனி குடோன் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள ஓம் முருகா பட்டாசு கடை, முத்துமாரி ஆட்டோ ஓர்க்ஸ், நடராஜன் லட்சுமியம்மாள் ஆப்செட் ஆகியவற்றில் வேலைபார்த்த நபர்களை சாட்சியாக விசாரித்தேனா என்றால் சம்பவ இடத்தில் அவர்கள் இல்லையென்பதால் விசாரிக்கவில்லை. சம்பவ இடத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் நாரணாபுரம் அரசு ஆரம்ப சுகாதார மையம் உள்ளது என்றால் சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும்.

2) சம்பவம் பற்றி எவ்வளவு நேரம் கழித்து புகார் கிடைத்தது என்றால் 45 நிமிடத்தில் கிடைத்தது. அ.சா.–1 ராஜா என்பவர் விபத்தினை நேரில் பார்த்த சாட்சி இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் ஆள்நடமாட்டம், போக்குவரத்து அதிகம் உள்ள பகுதி என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் சாலையில் ஆங்காங்கே வேகத்தடைகள்

அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பள்ளிக்கு அருகில் மட்டும் ஒரு வேகத்தடை உள்ளது. நான்தயார் செய்த மாதிரி வரைபடத்தில் வாகனத்தின் டயர்மார்க் குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் டயர் மார்க் அங்கில்லாததால் நான்அதை காட்டவில்லை. பொதுவாக ஒரு இருசக்கர வாகனம் வேகமாக சென்று திடீரென பிரேக் பிடிக்கும்போது, அந்த வாகனத்தின் டயர் மார்க் குறைந்தது இரண்டு நாட்கள் சாலையில் இருக்கும் என்றால் அதனை உறுதியாக கூறமுடியாது. பார்வை மகஜர் ஆவணத்தில் கிழமேல் என்ற வார்த்தை இடைசெறுகலாக உள்ளது என்றாலும், அதற்கு அடுத்தவரியில் திருத்தம் உள்ளது என்றாலும் சரிதான். விபத்திற்கு பின்னர் அடிபட்ட நபர்கள் எந்த மருத்துவமனைக்கு யாரால் அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்ற விவரத்தை விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அந்த வழியாக சென்ற ஆட்டோவில் அவர்களை ஏற்றிச் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக எனது விசாரணையின்போது தெரிந்து கொண்டேன். அ.சா.–1 ராஜா எனக்கு அளித்த வாக்குமூலத்தில் மேற்படி விவரத்தை தெரிவித்துள்ளாரா என்றால் தெரிவித்துள்ளார். சிவகாசி அரசு மருத்துவமனையில் எந்த சமயமும் காவலர் ஒருவர் தகவல் பெறுவதற்காக பணியில் இருப்பார் என்றால் சரிதான். மேற்படி காவலர் மூலம் காவல் நிலையத்திற்கு தகவல் ஏதும் அளிக்கப்பட்டதா என்றால் கொரோனா தொற்று காலம் என்பதால் அந்த சமயத்தில் காவலர் இருந்தாரா என்பது ஞாபகம் இல்லை. அன்றைய தினம் சிவகாசி அரசு மருத்துவமனையில் காவலர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டார்களா என்பது பொதுநாட்குறிப்பினை பார்த்தால் தெரியும், அது பற்றி சிவகாசி நகர் காவல் நிலைய பொதுநாட் குறிப்பினை பார்த்துத்தான் கூற இயலும். அன்றைய தினம் சிவகாசி அரசு

மருத்துவமனையில் எந்த காவலர் பணியில் இருந்தார் என்பதைதெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

3) இந்த வழக்கில் முதலில் வாங்கப்பட்ட புகார் வழக்கிற்கு பாதகமாக இருந்ததால் அது மறைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வாளர் இருசக்கர வாகனத்தை முறையாக ஆய்வு செய்யாமல் மோட்டார் வாகன ஆய்வறிக்கை வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.–1 ராஜா, அ.சா.–3 மணிகண்டன், அ.சா.–4 வரதராஜன் ஆகியோருக்கு சம்பவத்திற்கு முன்பு எதிரியின் பெயர் விவரம் தெரியாது என்றால் சரிதான். அ.சா.–1 ராஜா, அ.சா.–3 மணிகண்டன், அ.சா.–4 வரதராஜன் ஆகியோருக்கு எதிரியின் பெயர் விவரம் எவ்வாறு, யார் மூலம் தெரியவந்தது என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அவர்கள் விசாரித்து தெரிந்து கொண்டதாக தெரிந்து கொண்டேன். யார் மூலம் என்பது பற்றி தெரியவில்லை. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் இறந்துபோனவரின் குடும்பத்திற்கு இழப்பீடு கிடைக்க வேண்டுமென்பதற்காக அவசர கோலத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றாலும், எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.